"மழைநீர் சேமிப்போம்" "பிளாஸ்டிக்கைதவிர்ப்போம் "

நகராட்சிஅலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 31.12.2021.

## நகர்மன்றஅவசரக்கூட்டஅழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2051 பிலவ வருடம், மார்கழி மாதம் 16 - ம் நாள் 31.12.2021-ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 04.00 மணி அளவில் நகர்மன்றஅலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்றஅவசரக்கூட்டம் நடைபெறும்.

தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி -அல்லிநகரம் நகராட்சி

**பொருள்01:-**

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க. எண் : 276 / 2020 / A2, நாள். 08.12.2021-ன்படி தேனி -அல்லிநகரம் நகராட்சி **(** தேர்வு நிலை **)** - க்கு 2020 - 2021 ஆம் நிதியாண்டிற்கு பங்குத்தொகை ரூ. 90,000/- மற்றும் 2021 - 2022 - ம் நிதியாண்டிற்கான பங்குத்தொகை ரூ.1,25,000/- ம் சேர்த்து தொகை ரூ.2,15,000/- ஐ தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூருக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1. பங்குத்தொகை ரூ. 2,15,000/- ஐ நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 604 / 2019 / பி2**

**தீர்மான எண் :** 2111
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 02:-</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 33 வரையிலான பகுதிகளில் உள்ள தெருமின் விளக்குகள் பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணி 06.12.2018 முதல் தனியார் மூலம் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு ரூ. 31.96 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணி மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டது. தற்பொழுது 01.01.2021 முதல் 31.12.2021 வரை M/s. சடையாண்டி ஏஜன்ஸீஸ் மூலம் ரூ. 31.96 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அதன் பேரில், தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம். ந.க. எண். 13899/2016/DO1. நாள். 21.07.2017 மற்றும் 29045/2019/DO2. நாள். 27.12.2019 மற்றும் 17.12.2020 மேற்கண்ட பராமரிப்பு பணி தனியார் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ள முறையே இவ்வலுவலக இதே எண்ணிட்ட இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை. நாள். 06.12.2018, 31.12.2019 மற்றும் 31.12.2020 ன்டி பணி உத்திரவு மேற்கண்ட பராமரிப்பு பணி மேற்கொள்ளபட்டு வருகிறது.

இந்நிலையில், மேற்கண்ட பராமரிப்பு ஒப்பந்த காலம் வருகின்ற 31.12.2021 உடன் முடிவடைகிறது. ஏற்கெனவே, தெருவிளக்கு பராமரிக்க தேவையான பணியாளர்கள் தனியார் மூலம் பெறுவதற்கு உரிய பிரேரணை தயார் செய்யப்பட்டு இவ்வலுவலக ந.க. எண். 2928/2021/இ2. நாள். 12.10.2021 ன் படி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு உத்தரவு எதிர்நோக்கப்பட்டு உள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களிடமிருந்து தனியார் மூலம் பணியாளர்கள் பெறுவதற்கு உத்திரவு வரப்பெறாததாலும், அவசர அவசியம் கருதி தற்பொழுது பராமரித்து வரும் ஒப்பந்ததாரர் M/s. சடையாண்டி ஏஜன்ஸீஸ் மூலம் ஜனவரி -2022 ம் மாதம் பராமரிப்பதற்கும், உத்தேச செலவினம் ரூ. 2.67 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :-** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பராமரிப்பு பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1208 / 2017 / இ2**

**தீர்மான எண் :** 2112
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 03:-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிதழில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரபெற்றுள்ளது.

| வ.எண். | நாளிதழ் | பட்டியல் எண் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | Kal Publication ( P ) Ltd. தினகரன் | எண். 3300312470, நாள். 02.11.2021 | செய்தி மக்கள் தொடர் அலுவலர், தேனி வெளியீட்டு ஆணை எண். 172 / ஒப்பந்தப்புள்ளி / விளம்பரம் / 2021 / நாள். 01-11-2021. | ரூ. 9072/- |

மேற்கண்ட தொகை ரூ. 9072 / - ( ரூபாய் : ஒன்பது ஆயிரத்து எழுபத்து இரண்டு மட்டும் ) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 1952 / 2021 / அ3**

**தீர்மான எண் :** 2113
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 04:-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையத்தினை பராமரிக்க போதிய பணியாளர்கள் இல்லாததால் 01.09.2021 முதல் 30.11.2021 வரை மூன்று மாத காலத்திற்கு தனியார் மூலம் பராமரிப்பதற்கு ஒப்பந்தபுள்ளி கோரி திரு. T. தவமணி என்பவர் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் பாதாள சாக்கடை திட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை பராமரிக்க தேவையான பணியாளர்கள் தனியார் மூலம் பெறுவதற்கு உரிய பிரேரணை தயார் செய்யப்பட்டு இவ்வலுவலக ந.க.எண் 2929/2021/இ3 நாள். 12.10.2021ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு உத்தரவு எதிர்நோக்கப்பட்டு உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் இருந்து உரிய உத்தரவு வரப்பெறாததாலும் பணியின் அவசர அவசியம் கருதியும் நகர்மன்ற தீர்மான எண். 2085 நாள். 26.11.2021ன்படி, மேற்படி

ஒப்பந்ததாரர் மூலம் 31.12.2021 வரை ஒருமாத காலம் பராமரிக்க தீர்மானிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் தனியார் மூலம் பராமரிப்பு காலம் 31.12.2021 உடன் முடிவடைவதாலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் இருந்து தனியார் மூலம் பணியாளர்கள் பெறுவதற்கு உத்தரவு வரப்பெறாததாலும், தற்பொழுது பராமரித்து வரும் ஒப்பந்ததாரர் திரு. T. தவமணி மூலம் ஜனவரி 2022 மாதம் பராமரிப்பதற்கும் உத்தேச செலவினம் ரூ 2.50 இலட்சம் ஆகும். மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2224 / 2021 / இ3**

**தீர்மான எண் :** 2114
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 05:-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி கழிவுநீர் திட்ட உந்து நிலையம், சாலையோர துணை கழிவுநீர் உந்து நிலையம், கழிவுநீர் சேகரிக்கும் குழாய்கள், ஆள் இறங்கு தொட்டிகள் பராமரிக்க போதிய பணியாளர்கள் இல்லாததால் 01.09.2021 முதல் 30.11.2021 வரை மூன்று மாத காலத்திற்கு தனியார் மூலம் பராமரிப்பதற்கு ஒப்பந்தபுள்ளி கோரி திரு. T. தவமணி என்பவர் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் பாதாள சாக்கடை கழிவுநீர் சேகரிக்கும் குழாய்கள், உந்து நிலையம், ஆள் இறங்கு தொட்டிகள் பராமரிக்க தேவையான பணியாளர்கள் தனியார் மூலம் பெறுவதற்கு உரிய பிரேரணை தயார் செய்யப்பட்டு இவ்வலுவலக ந.க.எண். 2929/2021/இ3 நாள். 12.10.2021ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு உத்தரவு எதிர்நோக்கப்பட்டு உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் இருந்து உரிய உத்தரவு வரப்பெறாததாலும் பணியின் அவசர அவசியம் கருதியும் நகர்மன்ற தீர்மான எண். 2086 நாள். 26.11.2021ன்படி, மேற்படி ஒப்பந்ததாரர் மூலம் 31.12.2021 வரை ஒருமாத காலம் பராமரிக்க தீர்மானிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் தனியார் மூலம் பராமரிப்புக்காலம் 31.12.2021 உடன் முடிவடைவதாலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் இருந்து தனியார் மூலம் பணியாளர்கள் பெறுவதற்கு உத்திரவு வரப்பெறாததாலும், தற்பொழுது பராமரித்து வரும் ஒப்பந்ததாரர் திரு. T. தவமணி மூலம் ஜனவரி 2022 மாதம் பராமரிப்பதற்கும் உத்தேச செலவினம் ரூ

2.90 இலட்சம் ஆகும். மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2223/ 2021 / இ3**

**தீர்மான எண் :** 2115
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 06:-

இந்நகராட்சி பொது சுகாதாரம் டெங்க காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகாக முதிர் கொசுக்களை கட்டுப்படுத்தவும், டெங்கு பாதிப்புகள் வராத வண்ணம் முழுமையாக தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள 10 Hand Fogging Machine, 5 Pulse Fogging Machine இயந்திரங்கள் மற்றும் Gas Cylinder - 600 எண்ணங்கள் அரசு அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டிகோ சர்வ், திருச்சி நிறுவனத்தில் இருந்து வாங்கிடவும், அதற்க்கும் உத்தேச செலவு செலவு தொகை ரூ. 8.00 இலட்சத்திற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 3691 / 2021 / எச்1**

**தீர்மான எண் :** 2116
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 07:-

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான காமராஜ் பேருந்து முனையத்தில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்வதற்கான பணிகள்

மேற்கொள்ளுவதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 0.48/- இலட்சம் ஆகும். மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..
3) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3616 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 2117
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 08:-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதித்திட்டம் 2020 - 2021 -ம் ஆண்டு பகுதி - 1 - ன் கீழ் ரூ.180.00 இலட்சம் மதிப்பீட்டில் நகரின் பிரதானச் சாலையான மதுரை ரோடு கருவேல்நாயக்கன்பட்டி முதல் கம்பம் ரோடு கொட்டக்குடி வரை மற்றும் பெரியகுளம் ரோட்டில் சாலையின் நடுவில் சென்டர் மீடியன் தெருவிளக்குகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி தேசிய நெடுஞ்சாலை 45 நீட்சி தேனி நகர் பகுதி சாலை கி.மீ. 3 / 4 - 6 / 2 வரை சென்டர் மீடியனில் மின் விளக்குகள் பதிப்பதற்கு கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை, க ( ம ) ப தேனி அலுவலகத்தில் அனுமதி கோரப்பட்டதற்கு அவ்வலுவலகத்தின் கடிதம் ந.க.எண். 170 / 2021 / இவஅ 3, நாள்.16.12.2021-ன் படி சீரமைப்புத் தொகையாக ரூ. 5,59,000/- + GST ரூ. 67,100 மொத்தம் ரூ. 6,26,100/- ஐ செலுத்தக்கோரி தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் திட்டப் பணியினை மேற்கொள்ளுவதற்கு சீரமைப்புத் தொகையாக ரூ. 6,26,100/-ஐ கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை, க ( ம ) ப தேனி அலுவலகத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 93 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 2118
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 09:-

இந்நகராட்சி அலுவகத்தில் உள்ள 31 எண்ணம் ஏர்கண்டிஸ்னகர்கள் மற்றும் 12 Kw UPS ஆகியவற்றை ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுவதற்கு 29.12.2021-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரியதொகை (ரூ) ( வரிகள்நீங்கலாக ) | மதிப்பீட்டைவிடகூடுதல் / குறைவுசதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.இராஜேந்திரன், நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 99190.00 | 0.05 % குறைவு |
| 2 | திரு.எம்.தர்மர், நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 99660.00 | 0.42 % அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு</u>

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவாக விலைவிகிதம் கோரிய **திரு.ஆர்.இராஜேந்திரன்** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 3205 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 2119
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 10:-

தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வது வார்டு சிவாஜி நகரில் உள்ள நீடிப்பு பகுதியில் இரண்டு சந்துகள் மேற்கில் இருந்து கிழக்குப்பகுதி நீரோட்டம் செல்லும் வகையில் இயற்கையான தரை அமைப்பில் அமைந்துள்ளது. ஆனால் கிழக்கு பகுதியில் கழிவுநீர் வெளியேற உரிய வழிவகை இல்லாததால் கழிவுநீர் தேங்கி பெரும் சுகாதார கேடு ஏற்படுகிறது.

இதனால் தேங்கி உள்ளள கழிவுநீரை வெளியேற்ற வழிவகை செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். எனவே சிவாஜி நகர் சந்தில் கிழக்குப் பகுதியில் ஒரு தொட்டி கட்டி அதில் கழிவுநீரை சேகரித்து மின்மோட்டார் மூலம் மேற்குப்பகுதியில் உள்ள மழைநீர் வடிகாலை சென்று அடையும் வகையில் குழாய் பதிப்பதற்கும், மின் மோட்டார் பொருத்துவதற்கும் மற்றும் தொட்டி கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளுவதற்கு உத்தேச செலவினம் ரூ.4.00/- இலட்சம் ஆகும். மேற்படி செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

இ ) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 3744 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 2120
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 11:-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிவு அலுவலக அறைகளிலும் புதியதாக கண்காணிப்பு கேமரா அமைக்கும் பணியினை மேற்கொள்ளுவதற்கு உத்தேச செலவினம் ரூ. 4.00/- இலட்சம் ஆகும். மேற்படி செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

இ ) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 3745 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 2121
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 12:-</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2021 - 2022 - ம் ஆண்டின் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கர்னல் ஜான் பென்னிக்குக் பேருந்து நிலைய வளாகப் பகுதியில் புதியதாக அறிவுசார் மையம் மற்றும் கல்வி மையத்திற்கு கட்டடம் கட்டும் பணிகள் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுவதற்கு 29.12.2021–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் கட்டிடப்ப பணிகள் செய்வதற்கு கீழ்கண்ட விலை விகிதத்தின்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ( ரூ ) ( வரிகள் நீங்கலாக ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ( ரூ ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு. A.செல்வன், ஜெய் ஆஞ்சநேயா நகர், பி.சி.பட்டி, தேனி | 16312088.24 | 18379859.12 | 12.67% கூடுதல் |
| 2 | திரு.P.பாண்டியராஜ், எண். 04, ஜவஹர் குறுக்குத் தெரு, என்.ஆர்.டி.நகர், தேனி | | 20670740.96 | 26.72 % கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலைவிகிதம் கோரியுள்ள **திரு. A.செல்வன்,** என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியானது அலுவலக மதிப்பீடை விட 12.67 % கூடுதலாக உள்ளதால் விலை விகிதத்தினை குறைத்து தர கோரப்பட்டது. அதன்படி **திரு. A.செல்வன்,** என்பவர் பணியாளர்களின் ஊதியம் மற்றும் கட்டுமான பொருட்களின் விலைவாசி உயர்வின் காரணமாக ஏற்கனவே மொத்த மதிப்பீட்டினை காட்டிலும் 12.67 % கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதை தற்போது மாற்றம் செய்து மதிப்பீட்டினை காட்டிலும் 4.92 % கூடுதலாக இப்பணியினை செய்து தருவதாக தெரிவித்து, ஏற்கனவே குறிப்பிட்டுள்ள தொகையினை காட்டிலும் தற்போது குறைத்து விலை விகிதம் குறிப்பிட்டுள்ளதாலும், இதற்கு மேல் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தினை குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்து கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி பணியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி 2.7.2-ன்படி தற்போது கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி

மதிப்பீட்டை விட 4.92 % கூடுதலான விலைவிகிதம் கொண்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு அனுப்ப கோரி உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி குழு பரிந்துரை செய்துள்ளது அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:–

1. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள **திரு. A.செல்வன்,** என்ற ஒப்பந்ததாரர் உள்ளூர் ஒப்பந்தக்குழுவில் கலந்து கொண்டு தற்போது மாற்றம் செய்து கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளியானது அலுவலக மதிப்பீட்டை காட்டியும் 4.92 % கூடுதலான விலை விகிதத்தை கொண்ட ஒப்பந்தப்புள்ளியாக இருப்பதால் அதனை முடிவு செய்வது தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பொறியியல் கையேடு பத்தி 2.7.2-ன்படி நகர்மன்றத்தின் வரம்பிற்கு உட்பட்டு இருப்பதாலும், மற்றும் இப்பணியினை விரைவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு உடனடியாக பணி மேற்கொள்ள இருப்பதால் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டினை விட 4.92 % கூடுதலாக கோரிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் கோரியுள்ள கூடுதல் விலை விகிதத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3251 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 2122
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 13:-

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.28369/2018/ஜே3 நாள் 22.11.2018 உத்தரவின்படி இந்நகராட்சிப்பகுதிகளில் உள்ள 33 வார்டு பகுதி முழுவதும் முதல்நிலை குப்பை சேகரித்தல், தரம் பிரித்து குப்பை சேகரிக்கும் கூடத்தில் சேர்த்தல், திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சுகாதாரப்பணிகள் ஆகிய பணிகளுக்கு வெளிக்கொணர்வு முறையில் 21.10.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் 01.01.2021 முதல் 31.12.2021 வரையுள்ள காலத்திற்கு 50 தனியார் தூய்மை பணியாளர்கள் பொன். ராமர் நிறுவனம் மூலம் பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்துடனான ஒரு வருட ஒப்பந்தக்காலம் 31.12.2021ல் முடிவடையவுள்ளது.

தற்போது சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2 நாள் 02.10.2021-ன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் ஆற்ற வேண்டிய சேவைகளை திறம்பட மேற்கொள்வதற்கு விழிப்புணர்வு முகமை மூலம் பணியாட்கள் ஒப்பந்த அடிப்படையில் வரப்பட்டுள்ள பொது வழி முறைகளில் வரையறுக்கப்பட்டுள்ள அதாவது நியமனம் செய்ய வேண்டிய அளவுகோலின்படி இந்நகர்மன்ற தீர்மான எண்.2053 நாள் 18.11.2021-ல் அனுமதி பெற்றுள்ள 119 பற்றாக்குறை பணியாளர்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி வழங்க கோரி கருத்துரு இவ்வலுவலக ந.க.எண்.2949/2021/எச்1 நாள் 18.11.2021ன்படி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே சுகாதார அலுவலரின் அறிக்கையின்படி மூன்று மாத காலம் அல்லது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி வழங்கும் வரையில் இதில் எது முன்னமோ அது வரையில் தற்போது 50 தனியார் தூய்மை பணியாளர்கள் வழங்கி வரும் பொன்.ராமர் நிறுவனத்திடமிருந்து பணியாளர்கள் பெற்று திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. அதற்கான செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2736 / 2019 /எச்1**

**தீர்மான எண் :** 2123
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் (மற்றும்)
ஆணையாளர்
தேனி -அல்லிநகரம் நகராட்சி